ஏப்ரல் 2023

**6** மகிழ்ச்சி மிகுந்த முதியவர்களுக்கான செய்திமடல்

# மூத்த குடிமக்கள் மத்தியில் சுயதொழிலை மேம்படுத்தல்

**— முதியோருக்கான தேசிய செயலகத்தின் அனுசரணையுடன் —**



## திட்டத்தின் பின்னணி

இலங்கையில் முதியோர் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. எனவே, அவர்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவது மிக முக்கியமானதாகும். நாடு பூராகவும் வாழும் படைப்பாற்றல் மிக்க முதியோர்களுக்கு (60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட) தொடர்ந்தும் சமூகத்துக்காக உழைக்கவும் பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருக்கவும் இத்திட்டம் துணை புரிகின்றது.

## நோக்கம்

- முதியோர்களின் சுய ஆக்கத்திறன் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் அவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துதல்.
- நாட்டின் பொருளாதாரத்தின் ஒரு பங்காக விளங்கும் முதியோர் சமூகமொன்றை உருவாக்கல்.
- மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) பங்களிக்க மூத்த குடிமக்களை ஊக்குவித்தல்.

## திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- இத்திட்டம் சுயதொழிலில் ஈடுபடுவோர்இ ஏதேனும் தொழில் அல்லது விவசாயத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது குழுமங்களாக ஈடுபடுவோரினால் முன்மொழியப்பட்ட வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை ஆதரிக்கின்றது.
- ஒரு பிரதேச செயலகத்திலிருந்து (DS) 2 பயனாளிகள் வீதம் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.
- பயனாளிகளுக்கு தேவையான உபகரணங்கள்இ இயந்திரக்கருவிகள்இ மூலப்பொருட்கள்இ நடவுப்பொருட்கள்இ விற்பனைக்கூட நிர்மாணிப்பு மற்றும் திருத்தல் அல்லது தேவையான தொழிநுட்ப ஆலோசணைகள்இ பயிற்சிகள் என்பன அதிகபட்சமாக ரூ.30,000.00 இற்குள் வழங்கப்படும்.

## தகைமை

1. பயனாளிகள் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாகஇ குறைந்த வருமானமுடைய விண்ணப்பதாரர்களாக இருக்க வேண்டும் (மாதத்திற்கு ரூ. 6,000.00 இற்கு குறைவாக).

2. கிராம முதியோர் சங்கம் அல்லது முதியோர் குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படலாம். இதனை சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை அல்லது Nளுநு இனால் வழங்கப்படும் முதியோர் அடையாள அட்டையின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

3. மதிப்பீட்டுத் தொகை ரூ. 30,000.00 ஐ விட அதிகமாகவுள்ள போது மீதமுள்ள தொகை எவ்விதம் உறுதி செய்யப்படும் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

## செயன்முறை (வழக்கமான திட்டம்)

**படி 1**
**பிப்ரவரி**

1. NSE சுயதொழில் வாய்ப்பு விண்ணப்பப்படிவத்தையும் தேர்வு தீர்மானங்களையும் பிரதேச செயலகங்களுக்கு (DS) அனுப்புகின்றது.

**படி 2**

2. DS கள் இத்திட்டத்தை பற்றி முதியோர் சமூகங்களை அறிவூட்டுகின்றனர்.
3. சமூக சேவை அதிகாரி (SSO)/ மாகாண சமூக சேவை அதிகாரி (Provincial SSO) / முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி (ERPO)/ அபிவிருத்தி அதிகாரி (முதியோர்) பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்வார்கள்.

**படி 3**
**ஆகஸ்ட்**

4. ஒவ்வொரு பிரதேச செயலகத்தாலும் தேர்வு செய்யப்பட்ட தனிநபர்கள், னுளு இன் பரிந்துரையுடன் விண்ணபப்பபடிவங்களை NSE இற்கு சமர்ப்பிப்பர்.

தேவையான ஆவணங்கள்: உள்ளடக்க கடிதம், விண்ணபப்பபடிவங்கள், ID பிரதி மற்றும் திட்ட முன்மொழிவுகள்.

சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாள்: ஆகஸ்ட் இறுதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**படி 4**

5. SSO/ Provincial SSO/ ERPO/ DO க்கள் ஒவ்வொரு DS இலிருந்தும் 2 முன்மொழிவுகளைத் தேர்ந்தெடுத்து NSE க்கு சமர்ப்பிப்பர்.
6. SSO/ Provincial SSO/ ERPO / DO சமர்ப்பித்த முன்மொழிவுகளை NSE அங்கீகரிக்கின்றது.
7. DS மூலம் பயனாளிகளுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்படுகின்றது.



தாவர நாற்றங்கால் சுயதொழில்



துணி மற்றும் பாடிக் (batik) வடிவமைப்பாளர் சுயதொழில் செய்பவர்

## பின் தொடரல்

1. சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தின் SSO/ Provincial SSO/ முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி (ERPO)/ அபிவிருத்தி அதிகாரி (முதியோர்) முதியோருக்கான தேசிய செயலகத்துக்கு பண ரசீதை (சுமார் 172) அனுப்ப வேண்டும்.
2. பயனாளிகளுக்கு பணம் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் தேசிய முதியோர் செயலகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.
3. சம்பந்தப்பட்ட பயனாளிகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கை 3 மாதங்களுக்கொரு முறை சமூக சேவை அதிகாரி/ மாகாண சமூக சேவை அதிகாரி/ முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி/ அபிவிருத்தி அதிகாரி (முதியோர்) ஆகியோரால் புதுப்பிக்கப்பட வேண்டும்.
4. மூன்று மாதங்களின் பின்னர்இ குறித்த திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்து தேசிய முதியோர் செயலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

## முன்னுரிமை/ பயனாளிகளை தெரிவு செய்தல்

1. விவசாயம் சார்ந்த சுயதொழில்களில் ஈடுபடல்.
   எ.கா. மஞ்சள், இஞ்சி, மிளகாய், காளான் போன்றன. மஞ்சள் பயிர்ச்செய்கை போன்ற குறுங்கால பயிர்களுக்குஇ 5 பேர்ச் அல்லது அதற்கு மேற்பட்ட நிலம் இருப்பது கட்டாயமாகும்.

2. இன்று நம்மிடமிருந்து அருகிச் செல்கின்ற சந்தை மதிப்பும்இ தேவையும் மிக்க பாரம்பரியமான தொழில்களின் வளர்ச்சிக்கு உதவுதல்.
   எ.கா. பாரம்பரிய ஓலைப்பாய்கள், மட்பாண்டங்கள், பனைப்பொருட்கள், ஆயர்வேத பொருட்கள்இ பீரலு உற்பத்திகள்.

3. தற்போது நடைமுறையில் இருக்கும் சுயதொழில்.

4. தேவையான மூலப் பொருட்கள்இ கருவிகள், மூலப்பொருட்கள் அல்லது நடவுப்பொருட்கள் வாங்குதல், விற்பனை சாவடிகளை கட்டுதல் அல்லது பழுதுபார்த்தல் அல்லது தேவையான தொழிநுட்ப ஆலோசணைகள் மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளல்.



பயிர்ச்செய்கை – சுயதொழில்



கோழி வளர்ப்பு – சுயதொழில்

## இத் திட்டத்தின் விரிவான எடுத்துக்காட்டுகள் (2022 இல் பெறப்பட்டது)

அட்டவணை 1
மாகாண ரீதியாக

| மாகாணம் | தொகை |
|---|---|
| மத்திய | 28 |
| கிழக்கு | 18 |
| வட மத்திய | 27 |
| வடமேல் | 13 |
| வடக்கு | 14 |
| சப்ரகமுவ | 21 |
| தென் | 30 |
| ஊவா | 9 |
| மேல் | 22 |
| மொத்தத்தொகை | 182 |

அட்டவணை 2
மேல் மாகாணத்தில் ஏற்பட்ட முறிவுக்கான எடுத்துக்காட்டு

| மாவட்டம் | கொழும்பு | களுத்தறை | கம்பஹா | தொகை |
|---|---|---|---|---|
| தும்புதடி / தும்புதடி உற்பத்தி | 2 | 4 | - | 6 |
| அலங்கார பூக்களும் தாவரங்களும் | 1 | 1 | 2 | 4 |
| சில்லறை வியாபாரம் | 2 | 2 | 1 | 5 |
| தைக்கப்பட்ட ஆடை விற்பனை | 2 | 1 | 2 | 5 |
| இலைக்கஞ்சி விற்பனை | - | - | 1 | 1 |
| மொத்தத்தொகை | 7 | 8 | 6 | 21 |

## ஒரு புதிய முயற்சி



பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்கும் வகையில் முதியோருக்கான தேசிய செயலகத்தினால் "நாரங்விட்ட" பகல்நேர முதியோர் பராமரிப்பு மையத்தில் ஒரு புதிய சுயதொழிற் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

அப்பகுதியின் பொதுவான வளங்களான மரவள்ளி மற்றும் பலாப்பழ உற்பத்திகளை சந்தைப்படுத்தல்இ சவர்கார உற்பத்தியை அறிமுகபபடுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## முதியோர்களுக்கான தேசிய செயலகத்தில் இருந்து செய்திகள்

இலங்கையில் முதியோர் சனத்தொகை வேகமாக அதிகரித்து வரும் இவ்வேளையில், அவர்களைக் கவனிக்கும் பொறுப்பு தேசிய முதியோர் செயலகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அதன்படி, பொருளாதார பாதுகாப்பை உருவாக்க மற்றும் தன்னிறைவான முதியோர் தலைமுறையை உருவாக்க அவர்களின் திறமைகள், அனுபவங்கள் மற்றும் படைப்பாற்றலைப் பயன்படுத்துவது அவசியமாகும். எனவே முதியோர்களுக்கான இந்த சுய தொழில் திட்டம் முதியோருக்கான தேசிய செயலகத்தால் காலத்துக்கு பொருத்தமான வகையில் செயற்படுத்தப்படுகின்றது.

திரு. ஷாணக்க ஜயரத்ன
அபிவிருத்தி அதிகாரி
முதியோருக்கான தேசிய செயலகம்



இச் செய்திமடலானது முதியோருக்கான நல்ல (செயற்பாடுகள்) நடைமுறைகள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துவதாகும். முதியோருக்கான தேசிய செயலகம் (NSE) மற்றும் இளைஞர்கள்இ முதியோர் மற்றும் ஊனமுற்றோர் இயக்குனகரம் (YED) போன்றவற்றின் நல்ல நடைமுறைகள்இ சேவைகளை ஒப்புக்கொண்டு, JICA திட்டத்தின் (ProCEES) ஆதரவுடன் செய்திமடல் கட்டுரைகள் தயாரிக்கப்படுகின்றன.

உங்கள் சமூகத்தில் நல்ல செயல்பாட்டை அனுப்பவும்
jica.proces@gmail.com

இளைஞர்கள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் இயக்குநரகம், சுகாதார அமைச்சகம்
முதியோருக்கான தேசிய செயலகம், சமூக வலுவூட்டல் அமைச்சகம்
ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA)
சமூகத்தில் முதியோர் சேவையின் திறனை மேம்படுத்துவதற்கான திட்டம்

திட்ட அலுவலகம்
முதியோர்களுக்கான தேசிய செயலகம் (NSE)
முகவரி: D பிளாக், 2 வது மாடி, செட்ஷிரிபாய கட்டம் (II), பத்தரமுல்ல, கொழும்பு
மின்னஞ்சல்: jica.procees@gmail.com

Ministry of Health